**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 21.01.2025 |
| Case No. | : **O.S.97/2022** | Nationality | : Indian |
| Name | : பெருமாள் | Religion | : |
| Father's/Husband's Name | : பஞ்சநாதன் | Age | : 78 |
| Village | : | | |
| Taluk | : | | |

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நெடுங்கொல்லை கிராமத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து எங்குள்ளது என்றால் பூந்தோட்டம் கிராமத்தில் உள்ளது. எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எனது கிராமத்திலிருந்து சுமார் 3 பர்லாங் தூரம் இருக்கும். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்பவருக்கு தமிழ்நாடு அரசு அளித்த அடையாள அட்டை என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். நிரூபண வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்டு எடுத்து வரப்பட்டது என்றால் சரிதான். யார் தட்டச்சு செய்து எடுத்து வந்தது என்றால் வழக்கறிஞர் எடுத்து வந்தார். அவர்தான் என்னிடம் கையொப்பம் பெற்றார். அதில் உள்ள விவரங்களை அவரே தட்டச்சு செய்து எடுத்து வந்தாரா என்றால் சரியல்ல நான்தான் விவரம் சொன்னேன். எங்கு வைத்து விவரம் கூறினேன் என்றால் கும்பகோணம் வக்கீல் ஆபிசில் வைத்து விவரம் கூறினேன். தாவா

சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பத்திரம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் நான்கெல்லையில் உள்ள சொத்துக்களுக்கான பத்திரம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் சொத்தின் நான்கெல்லை தெரியும். வருவாய் துறை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் புல வரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து இன்னாருக்கு சொந்தமானது என்று வாதி பாலகிருஷ்ணன் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு எதன் அடிப்படையில் தெரியும் என்றால் நான் அங்கு வேலை செய்வதால் எனக்கு தெரியும். என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாய கூலி வேலை செய்கிறேன்.

2. நான் அவ்வாறு விவசாய கூலி வேலை செய்வது வேறு யாருக்கு தெரியும் என்றால் நெடுங்கொல்லை சின்னையன், காளிமுத்து, ஜெயபால், பேச்சிமுத்து ஆகியோருக்கு தெரியும். அவர்களும் என்னுடன் வேலை செய்வார்கள். ஆரம்பத்தில் வாதியின் தந்தை பெயரில் சொத்து இருந்தது என்றால் சரிதான். அவர் தொடர்ந்து சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் அச்சுதன் என்பவரிடமும் நான் வேலை செய்தேன் என்றால் சரிதான். அச்சுதன் இறக்கும் வரை அவர் சாகுபடி செய்து வந்து அவர் காலத்திற்கு பிறகு வாதி தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது வரை வாதி அவரது மகன் மற்றும் மருமகள் தாவா சொத்தினை சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பால்ராஜை தெரியுமா என்றால் தெரியும். பக்கத்து ஊர்க்காரர் ஆவார். அவரது குடும்பத்தாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதி விமல்ராஜை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தொடர்ந்து வாதி தாவா சொத்தினை சாகுபடி செய்து வந்த நிலையில் பிரதிவாதிகள் மேல் எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. 25.04.2005ம் தேதி வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்ட

விவரத்தை வாதி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2005 ம் ஆண்டிலிருந்து தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியிடமும் அதனை தொடர்ந்து பல நபர்களும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் அவ்வாறு ஒப்பந்தம் எதுவும் இல்லை.

3. நான் வாதியிடம் வேலை செய்கிறேனா அல்லது வாதிக்காக வேலை செய்கிறேனா என்றால் நான் வாதியிடம் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 20 அல்லது 25 ஆண்டுகளாக தொடர்ந்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு விவசாய கூலி வேலை செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் விவசாய கூலி வேலை செய்வதற்கு ஆவணங்கள் கொடுக்கப்படுவதில்லை. விவசாய கூலி வேலை செய்தால் ரசீது வழங்குவார்கள் என்றால் இல்லை. அவ்வாறு நான் ரசீது எதுவும் வாங்கியதில்லை. நான் சி.பி.ஐ கட்சியில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். என்ன பொறுப்பில் இருந்து வருகிறேன் என்றால் நெடுங்கொல்லை கிளை செயலாளராக இருந்து வருகிறேன். எனக்கு முழு நேர இயக்க பணி என்றால் சரிதான். கிளைச் செயலாளர் எனக்கு என்ன பணி என்றால் கட்சி தலைமை சொல்லும் பணிகளை செய்வதாகும். பொது உடமை கட்சியில் இருந்து வருவதால் எனக்கு நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல.

4. 25.04.2005 ம் தேதியில் ஒப்பந்தம் ஏற்பட்டதில் இருந்து தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதிதான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். பேருந்தில் வந்தேனா இருசக்கர வாகனத்தில் வந்தேனா என்றால் பேருந்தில் வந்தேன். எனது சாப்பாடு மற்றும் இதர செலவுகளை வாதி பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான். வாதியை

எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 50 வருடங்களாக தெரியும். நான் கம்யூனிஸ்ட் கட்சியில் முழு நேர பணியில் இருப்பதால் நான் விவசாய கூலி வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஒரு நாள் கூட தாவா சொத்தில் விவசாய கூலி செய்ததில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு 50 வருடங்களாக பழக்கம் என்றால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும்போது தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்தது என்றாலும் அதனை தெரிந்து கொண்டே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.01.22 15:29:57 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.